# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்(புத்தக & ஆக்கபூர்வமான வினாக்கள்)

## 10ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) மிதவாத தேசியவாதிகளின் பங்களிப்பைப் பட்டியலிடுக

**பதில் :** 1. தொடக்ககாலத்தில் மிதவாத தேசியவாதிகள் தங்கள் கண்ணோட்டங்களை பெருந்தன்மை வாய்ந்த மொழி நடையில் வேண்டுகோள்களாகவும், மனுச்செய்தல், இறைஞ்சுதல், குறிப்பாணைகள் மூலமாக அரசுக்கு சமர்ப்பித்தனர்.
2. ஆங்கிலேயர்கள் தங்களை தாராளமானவர்கள் என உரிமை கொண்டாடியதில் உள்ள தவறுகளை அம்பலப்படுத்தியதே மிதவாதிகள் செய்த முக்கியப் பங்களிப்பாகும்.
3. ஆங்கிலேயர்கள் எவ்வாறு இந்தியாவைச் சுரண்டினார்கள் என்பதை அம்பலப்படுத்தினர்.
4. இங்கிலாந்தில் ஜனநாயகக் கொள்கைகளைப் பின்பற்றும் ஆங்கிலேயர்கள், காலனிகளில் பிரதிநிதித்துவமற்ற அரசை திணித்து நாடகமாடுகின்றனர் என்பதையும் வெட்ட வெளிச்சமாக்கினர்.

2) திருநெல்வேலி எழுச்சி பற்றி ஒரு குறிப்பு வரைக.

**பதில் :** 1. திருநெல்வேலியிலும், தூத்துக்குடியிலும் நூற்பாலைத் தொழிலாளர்களை அணி திரட்டுவதில் வ.உ.சி, சுப்பிரமணிய சிவாவின் தோளோடுதோள் நின்றார்.
2. சிவா 1906இல் ஐரோப்பியருக்குச் சொந்தமான கோரல் நூற்பாலையில் நடைபெற்ற வேலை நிறுத்தத்திற்குத் தலைமையேற்றார்.
3. இந்நிகழ்வு நடைபெற்ற அதே சமயத்தில் பிபின் சந்திரபால் விடுதலை செய்யப்பட்டார். பிபின் விடுதலையைக் கொண்டாடுவதற்காகப் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்த வ.உ.சியும் சிவாவும் கைது செய்யப்பட்டனர்.
4. தலைவர்கள் இருவரும் அரச துரோகக் குற்றம் சாட்டப்பட்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டனர்.
5. வ.உ.சிக்கு கொடுமையான வகையில் இரண்டு ஆயுள் தண்டனைகள் வழங்கப்பட்டன.
6. மக்கள் செல்வாக்குப் பெற்ற இவ்விரு தலைவர்களும் கைது செய்யப்பட்ட செய்தி பரவியதில் திருநெல்வேலி கலவரம் வெடித்தது.
7. காவல் நிலைய, நீதிமன்ற, நகராட்சி அலுவலகக் கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. காவலர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நான்கு நபர்கள் கொல்லப்பட்டனர்.
8. தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டனர்.

3) இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் அன்னிபெசன்ட்டின் பங்களிப்பு யாது?

**பதில் :** 1. தேசிய இயக்கம் தளர்வுற்று இருந்த நிலையில் அன்னிபெசன்ட் 1916இல் தன்னாட்சி இயக்கத்தைத் தொடங்கினார்.
2. அவர் அகில இந்திய அளவில் தன்னாட்சி வழங்கப்பட வேண்டும் எனும் கோரிக்கையை முன்னெடுத்துச் சென்றார். இச்செயல் திட்டத்தில் G.S. அருண்டேல், B.P. வாடியா மற்றும் C.P. ராமசாமி ஆகியோர் அவருக்குத் துணை நின்றனர்.
3. தன்னுடைய திட்டத்தை மக்களிடையே கொண்டு செல்வதற்காக அன்னிபெசன்ட் நியூ இந்தியா, காமன் வீல் எனும் இரண்டு செய்தித்தாள்களைத் தொடங்கினார்.
4. அன்னிபெசன்ட் "விடுதலை பெற இந்தியா எப்படித் துயருற்றது", "இந்தியா; ஒரு தேசம்" எனும் இரண்டு புத்தகங்களையும் சுயாட்சி குறித்த துண்டு பிரசுரத்தையும் எழுதினார்.

4) இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஏன் பிரபலமானது?

**பதில் :** 1. பள்ளிகளில் இந்தி மொழி கட்டாயப் பாடமாக அறிமுகம் செய்யப்பட்டது, ராஜாஜியால் மேற்கொள்ளப்பட்ட ஒரு சர்ச்சைக்குரிய நடவடிக்கை ஆகும்.
2. தமிழ் மொழிக்கும் பண்பாட்டிற்கும் தீங்கு விளைவிக்க, ஆரிய வட இந்தியர்களால் கமத்தப்பட்ட ஏற்பாடாக இது கருதப்பட்டதால் மக்களிடையே பெரும் மனக்கசப்பை ஏற்படுத்தியது.
3. இதற்கு எதிராக ஈ.வெ.ரா மிகப்பெரிய பரப்புரையை மேற்கொண்டார்.
4. அவர் இந்தி எதிர்ப்பு மாநாடு ஒன்றை சேலத்தில் நடத்தினார்.
5. இந்தி எதிர்ப்பு போராட்டத்திற்கு ஒடுக்கப்பட்டோர் கூட்டமைப்பும், முஸ்லிம்லீக்கும் ஆதரவளித்தன.
6. திருச்சியிலிருந்து சென்னைக்கு ஊர்வலமொன்று திட்டமிடப்பட்டது. ஈ.வெ.ரா.பெரியார் உட்பட 1200 போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர்.
7. காங்கிரஸ் அரசு பதவி விலகியதைத் தொடர்ந்து இந்தி கட்டாயப் பாடம் என்பது நீக்கப்பட்டது.

5) தமிழ்நாட்டில் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளைக் கோடிட்டுக் காட்டுக.

**பதில் :** 1. 1942ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு காந்தியடிகள் "செய் அல்லது செத்துமடி" எனும் முழக்கத்தை வழங்கினார்.
2. தலைவர்கள் கைது செய்யப்படுவதை அறிந்த காமராஜர் தலைமறைவாகி வெள்ளையனே வெளியேறு இயக்கத்திற்காக மக்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்டார்.
3. துண்டுப் பிரசரங்களை விநியோகம் செய்து கொண்டிருந்தபோது ராஜாஜியும், சத்தியமூர்த்தியும் கைது செய்யப்பட்டனர்.
4. தமிழ்நாட்டில் இவ்வியக்கம் பாந்துபட்ட அளவில் நடைபெற்றது. மேலும் அஞ்சல் அலுவலகங்களை தீக்கிரையாக்குவது. தந்திக் கம்பங்களின் கம்பிகளை வெட்டிவிடுவது, ரயில் போக்குவரத்திற்கு ஊறு விளைவிப்பது போன்ற வன்முறை நிகழ்வுகள் அரங்கேறின.
5. பெருமளவிலான தொழிலாளர்கள் மற்றும் மானாவர்கள் இப்போராட்டத்தில் தீவிரப் பங்காற்றினர்.
6. மதுரையில் காங்கிரஸ் தொண்டர்கள் இராணுவத்துடன் மோதினார். எனினும் இவ்வியக்கம் இரக்கமற்ற முறையில் வன்முறை மூலம் ஒடுக்கப்பட்டது.

6) சென்னை மகாஜன சபை யாரால் துவங்கப்பட்டது?

**பதில் :** 1884 மே 16இல் M.வீரராகவாச்சாரி, P.ஆனந்தசார்லு, P.ரங்கையா மற்றும் சிலரால் நிறுவப்பட்ட இவ்வமைப்பின் முதல் தலைவராக R.ரங்கையா பொறுப்பேற்றார்.

7) சென்னை மாகாணம் எந்தெந்த பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தது?

**பதில் :** (i) தமிழ்நாடு அன்றைய சென்னை மாகாணத்தின் ஒரு பகுதியாக இருந்தது.
(ii) சென்னை மாகாணம் என்பது இன்றைய ஆந்திரப்பிரதேசத்தின் பெரும் பகுதிகளையும் (கடற்கரை மாவட்டங்கள் மற்றும் ராயலசீமா) கர்நாடகாவையும் (பெங்களூரு, பெல்லாரி தெற்கு கனரா), கேரளாவையும் (மலபார்) மற்றும் ஒடிசாவின் (கஞ்சம்) சில பகுதிகளையும் உள்ளடக்கியதாக இருந்தது.

8) சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியின் கப்பல்கள் பெயர் என்ன?

**பதில் :** காலியா மற்றும் லாவோ

9) அன்னிபெசன்ட் தன்னாட்சி இயக்கத்தை தொடங்கிய உடன் அவருடன் துணை நின்ற தலைவர்கள் யார்?

**பதில் :** தன்னாட்சி இயக்க திட்டத்தில் G.S.அருண்டேல் B.P.வாடியா மற்றும் C.P.ராமசாமி ஆகியோர் அவருக்குத் துணை நின்றனர்.

10) தென்னிந்த நலவுரிமைச் சங்கம் (South Indian Liberal Federation) தொடங்கிய பத்திரிக்கைகளின் பெயர் என்ன?

**பதில் :** ஆங்கிலத்தில் ஐஸ்டின் (Justice) (நீதி) தமிழில் திராவிடன், தெலுங்கில் ஆந்திர பிரகாசிகா எனும் மூன்று செய்தித்தாள்களையும் தொடங்கினர்.

11) ஈ.வெ.ரா. காங்கிரசை விட்டு வெளியேறக் காரணம் என்ன?

**பதில் :** சேரன்மாதேவி குருகுலப் பிரச்சனையும், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தொடர்பாக காங்கிரசுக்குள்ளே ஏற்பட்ட கருத்து வேறுபாடும் ஈ.வெ.ரா.வை காங்கிரசை விட்டு வெளியேற வைத்தன.

12) கொடிகாத்த குமரன் குறிப்பு எழுதுக.

**பதில் :** (i) 1932 ஜனவரி 11 இல் திருப்பூரில் கொடிகளை ஏந்திய வண்ணம் நாட்டுப்பற்று மிகுந்த பாடல்களைப் பாடிச் சென்ற ஊர்வலத்தினர் காவல் துறையினரால் இரக்கமின்றி அடித்து உதைக்கப்பட்டனர்.
(ii) பரவலாக திருப்பூர் குமரன் என்றழைக்கப்படும் O.K.S.R.குமாரசாமி தேசியக் கொடியை உயர்த்திப் பிடித்தவாறே விழுந்து இறந்தனர். ஆகையால் இவர் கொடிகாத்த குமரன் என புகழப்படுகிறார்.

13) இந்தியர்களின் எண்ணங்களை வெளிப்படுத்திய பத்திரிக்கைகள் யாவை?

**பதில் :** 1. சுதேசமித்திரன்
2. தி இந்து
3. இந்தியன் பேட்ரியாட்
4. இந்தியா
5. தேசாபிமானி
6. சூர்யோதயம்
7. மெட்ராஸ் ஸ்டாண்டர்ட்
8. சவுத் இந்தியன் மெயில்
9. விஜயா

14) சென்னையைச் சேர்ந்த மிதவாதத் தலைவர்கள் யாவர்?

**பதில் :** 1. V.S.சீனிவாச சாஸ்திரி
2. G.A.நடேசன்
3. T.M.மாதவராவ்
4. P.S. சிவசாமி
5. V. கிருஷ்ணசாமி
6. S.சுப்பிரமணியர்
7. T.R. வெங்கட்ராமனார்

15) திருப்பூர் குமரனின் வீரமரணம் பற்றி கூறுக.

**பதில் :** 1. 1932 ஜனவரி 11இல் திருப்பூரில் கொடிகளை ஏந்திய வண்ணம் நாட்டுப்பற்று மிகுந்த பாடல்களைப் பாடிச் சென்ற ஊர்வலத்தினர் காவல் துறையினரால் இரக்கமின்றி அடித்து உதைக்கப்பட்டனர்.
2. எல்லோராலும் திருப்பூர் குமரன் என்று அழைக்கப்படும் O.K.S.R.குமாரசாமி தேசியக் கொடியை உயர்த்திப் பிடித்தவாறே விழுந்து இறந்தார். ஆகையால் இவர் "கொடி காத்த குமரன்" எனப்புகழப்படுகிறார்.

**5 மதிப்பெண் வினாக்கள்** 4 x 5 = 20

16) தமிழ்நாட்டில் சுதேசி இயக்கம் எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டது என்பதை விவாதிக்கவும்.

**பதில் :** 1. சுதேசி இயக்கம் தமிழ்நாட்டில் ஒரு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்நியப் பண்டங்களைப் புறக்கணித்தல் தொடர்பாக காங்கிரஸ் தீவிரமான இயக்க நடவடிக்கைகளை மேற்கொண்டது.
2. வ.உ.சிதம்பரனார், V. சர்க்கரையார், சுப்பிரமணிய பாரதி, சுரேந்திரநாத் ஆரியா ஆகியோர் தமிழ் நாட்டைச் சேர்ந்த சிறந்த தலைவர்களாவர்.
3. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் கலந்து கொண்ட பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. மக்களைத் திரட்டுவதற்கு முதன் முதலாகத் தமிழ் பயன்படுத்தப்பட்டது.
4. மக்களின் நாட்டுப் பற்று உணர்வுகளைத் தட்டி எழுப்பியதில் சுப்பிரமணிய பாரதியின் தேசபக்திப் பாடல்கள் மிக முக்கியமானவையாகும்.
5. சுதேசி கருத்துக்களைப் பரப்புரை செய்ய பல இதழ்கள் தோன்றின. சுதேசமித்திரன், இந்தியா ஆகிய இரண்டும் முக்கிய இதழ்களாகும்.
6. தீவிர தேசியவாதத் தலைவரான பிபின் சந்திரபால் சென்னையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது ஆற்றிய சொற்பொழிவுகள் இளைஞர்களைக் கவர்ந்தன.
7. சுதேசி இயக்கத்தில் மாணவர்களும் இளைஞர்களும் பெருமளவில் பங்கேற்றனர்.
8. சுதேசியைச் செயல்படுத்துவதில் மேற்கொள்ளப்பட்ட துணிகரமான நடவடிக்கைகளில் ஒன்று தூத்துக்குடியில் வ.உ.சிதம்பரனார் தொடங்கிய சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி ஆகும்.
9. இவர் காலியா மற்றும் லாவோ எனும் இரு கப்பல்களை விலைக்கு வாங்கி அவற்றை தூத்துக்குடிக்கும் கொழும்புவிற்குமிடையே ஓட்டினார்.
10. மக்கள் செல்வாக்குப் பெற்ற தலைவர்களான வ.உ.சியும், சிவாவும் கைது செய்யப்பட்ட செய்தி பரவியதில் திருநெல்வேலியில் கலவாம் வெடித்தது.
11. காவல் நிலைய, நீதிமன்ற, நகராட்சி அலுவலகக் கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. காவலர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நான்கு நபர்கள் கொல்லப்பட்டனர்.
12. வ.உ.சி சிறையில் கடுமையாக நடத்தப்பட்டதோடு செக்கிழுக்க வைக்கப்பட்டார். கைது செய்யப்படவேண்டிய பிற தலைவர்கள் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்திலிருந்த பாண்டிச்சேரிக்கு இடம் பெயர்ந்தனர்.

17) தமிழ்நாட்டில் பிராமணரல்லாதோர் இயக்கம் தோன்றி வளர்ந்ததை ஆய்வு செய்க.

**பதில் : கல்வியறிவு பெற்ற பிராமணரல்லாதோர்:**

1. சென்னை மாகாணத்தில் கல்வி வேகமாக வளர்ந்தது. கல்வியறிவு பெற்ற பிராமனாரல்லாதோர் எண்ணிக்கை அதிகமானது.

2. தீவிர அரசியல் மற்றும் சமூக நடவடிக்கைகள் படித்த பிராமணரல்லாதவர்களை அரசியலில் ஈடுபடவைத்தது.

3. பிராமணர்களின் மேலாதிக்கத்தில் இருந்த அரசுப்பணிகளிலும், தேர்வு செய்யப்பட்ட அமைப்புகளின் பிரதிநிதித்துவத்திலும், அரசு வாய்ப்புகளிலும் சமநிலையற்ற தன்மை இருப்பதாகவும் சாதியப்பாகுபாடு குறித்தும் அவர்கள் பிரச்சனைகளைக் கிளப்பினர்.

**சென்னை திராவிடர் கழகம்:**

1. பிராமணரல்லாதோர் தங்கள் நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தங்களை ஒரு அரசியல் அமைப்பாக அணிதிரட்டிக் கொண்டனர்.

2. 1912இல் 'சென்னை திராவிடர் கழகம்' உருவாக்கப்பட்டது. அதன் செயலராக C. நடேசனார் செயலூக்க வகையில் பங்காற்றினார்.

3. 1916 ஜூன் மாதத்தில் அவர் பிராமணர் அல்லாத மாணவர்களுக்காக 'திராவிடர் சங்க தங்கும் விடுதியை' நிறுவினார். மேலும் பிராமனரல்லாதோரின் தலைவர்களான T.M. நாயர், P. தியாகராயர் ஆகிய இருவரிடையே நிலவிய கருத்து வேற்றுமையைச் சரிசெய்து இணக்கத்தை ஏற்படுத்தினார்.

**தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்:**

1. 1916 நவம்பர் 20இல் P. தியாகராயர், T.M. நாயர், C. நடேசனார் ஆகியோர் தலைமையில் முப்பது பிராமணரல்லாதவர்கள் சென்னை விக்டோரியா பொது அரங்கில் கூடினர்.

2. பிராமணரல்லாதோரின் நலன்களை மேம்படுத்துவதற்காக "தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்" எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது.

3. அவர்கள் ஆங்கிலத்தில் ஜஸ்டிஸ் (Justice) தமிழில் திராவிடன். தெலுங்கில் ஆந்திர பிரகாசிகா எனும் மூன்று செய்தித்தாள்களைத் தொடங்கினர்.

**நீதிக்கட்சி அமைச்சரவை:**

1. 1920இல் நடந்த தேர்தலில் நீதிக்கட்சி வெற்றி பெற்றது. A. சுப்புராயலு முதலாவது முதலமைச்சரானார்.

2. 1923இல் நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சியைச் சேர்ந்த பனகல் அரசர் அமைச்சரவையை அமைத்தார்.

18) சட்டமறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பங்கினை விவரி.

பதில் : காந்தியடிகள் முன்வைத்த கோரிக்கைகளை வைஸ்ராய் ஏற்றுக் கொள்ளாததைத் தொடர்ந்து அவர் சட்டமறுப்பு இயக்கத்தைத் துவங்கினார்.

**உப்புச் சத்தியாகிரகம்:**

1. ராஜாஜி உப்புச் சத்தியாகிரகம் ஒன்றினை ஏற்பாடு செய்து தலைமையேற்று வேதாரண்யம் நோக்கி அணிவகுத்துச் சென்றார்.

2. 1930 ஏப்ரல் 13ல் திருச்சிராப்பள்ளியிலிருந்து தொடங்கி ஏப்ரல் 28இல் தஞ்சாவூர் மாவட்டத்தின் வேதாரண்யத்தை அணிவகுப்பு சென்றடைந்தது.

3. இவ்வணிவகுப்புக்கென்றே 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது, சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்" எனும் சிறப்புப் பாடலை நாமக்கல் கவிஞர் ராமலிங்கனார் புனைந்திருந்தார்.

4. காவல் துறையின் கொடூரமான நடவடிக்கைகளைப் பொருட்படுத்தாமல் அணிவகுத்துச் சென்ற சத்தியாகிரகிகளுக்கு பயணித்த பாதையெங்கும் எழுச்சியமிகு வரவேற்பு அளிக்கப்பட்டது.

5. வேதாரண்யம் சென்றடைந்த பின்னர் ராஜாஜியின் தலைமையில் 12 தொண்டர்கள் உப்புச் சட்டத்தை மீறி உப்பை அள்ளினர். உப்புச் சட்டங்களை மீறியதற்காக ராஜாஜி கைது செய்யப்பட்டார்.

**தமிழக மாவட்டங்களில் பரவலான போராட்டங்கள்:**

1. T.பிரகாசம், K. நாகேஸ்வர ராவ் ஆகியோர் தலைமையில் சத்தியாகிரகிகள் சென்னைக்கு அருகேயுள்ள உதயவனம் என்ற இடத்தில் ஒரு முகாமை அமைத்தனர். ஆனால் அவர்கள் காவல் துறையால் கைது செய்யப்பட்டனர். இந்நிகழ்வு சென்னை கடையடைப்பிற்கு வழிகோலியது.

2. 1930 ஏப்ரல் 27இல் திருவல்லிக்கேணியில் காவல்துறையிளருடன் மோதல் ஏற்பட்டது. மூன்று மணிநேரம் நடைபெற்ற மோதலில் மூன்று நபர்கள் உயிரிழந்தனர்.

3. ராமேஸ்வரத்தில் உப்புச் சத்தியாகிரகம் மேற்கொள்ள முயன்ற தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.

4. மாகாணம் முழுவதிலும் நூற்பாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். உப்புச் சட்டங்களை மீறியதற்காக அபராதம் கட்டிய முதல் பெண்மணி ருக்மணி லட்சுமிபதியாவார்.

5. 1932 ஜனவரி 25இல் ஆரியா என அழைக்கப்படும் பாஷ்யம் புனித ஜார்ஜ் கோட்டையின் உச்சியில் தேசியக் கொடியை ஏற்றினார்.

19) ஜார்ஜ் ஜோசப் பற்றி விவரி.

**பதில் :** 1. வழக்கறிஞரும் நன்கு சொற்பொழிவாற்றும் திறன் படைத்தவருமான ஜார்ஜ் ஜோசப் மதுரையில் தன்னாட்சி இயக்கத்தை ஏற்படுத்தியதிலும், அதன் நோக்கத்தை மக்களின் கவனத்திற்கு கொண்டு சென்றதிலும் முக்கியப் பங்குவகித்தார்.

2. செங்கண்ணூரில் (கேரளா) பிறந்திருந்தாலும் மதுரையில் வசிப்பதையே விரும்பி மக்களின் வழக்கறிஞராகப் பணி செய்தார்.

3. தனது நீண்ட பொதுவாழ்வின் போது, அவர் கேரளாவில் வைக்கம் சத்தியாகிரகத்தை வழிநடத்தினார்.

4. ஏனெனில் இது இந்தியாவின் அனைத்து குடிமக்களுக்கும் சமூக உரிமைகள் தொடர்பான பிரச்சனையாக அவர் கருதினார்.

5. தமிழ் நாட்டின் குற்றப்பரம்பரைச் சமூகங்களின் பாதுகாவலராக விளங்கினார். பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு இவர் ஆற்றிய சேவைகளின் காரணமாக மதுரை மக்கள் இவரை "ரோசாப்புதுரை" என அன்புடன் அழைத்தனர்.

6. மதுரை தொழிலாளர் சங்கம் எனும் அமைப்பை ஏற்படுத்துவதற்கு, ஹார்வி மில் தொழிலாளர்களுக்கு உதவினார்.

7. இச்சங்கத்தின் தொடக்ககால போராட்டங்கள் நூற்பாலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வையும் வேலைநேரக் குறைப்பையும் பெற்றுத்தந்தன.